# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

---

# 1994 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, தனிசு அறவிடல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டம்

---

*(1994, மே மாதம் 26 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

***அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.***

---

*1994 மே மாதம் 27 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

*கொழும்பு 7, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

*விலை : ரூபா 1.65* *தபாற் செலவு : ரூபா 1.55*

## 1994 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, தனிசு அறவிடல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டம்

[1994, மே மாதம் 26 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஒ. 95/92

**1990 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க தனிசு அறவிடல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 1994 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, தனிசு அறவிடல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். *சுருக்கப் பெயர்.*

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1990 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தனிசு அறவிடல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— *1990 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்கச் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :—

"(2) எந்தத் தனிசில், தலமுகையில் உள்ளதாகச் சார்த்தப்படும் பணத்தொகையானது, ஒரு லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாவுக்குக் குறைவானதாக இருக்கின்றதோ அந்தத் தனிசை அறவிடுவதற்காக, இச்சட்டத்தினால் விதிக்கப்பட்டுள்ள நடவடிக்கை முறையின் நியதிகளின்படி நிறுவனமொன்றினால் வழக்கெதுவும் தொடுக்கப்படலாகாது." ; அத்துடன்

(2) அப்பிரிவின் ஓரக்குறிப்புக்குப் பதிலாகப் பின்வரும் ஓரக்குறிப்பை இடுவதன் மூலமும் :—

"தனிசொன்றை
அறவிடுவதற்
குப் பணம்
வழங்கும் நிறு
வனங்களால்
எடுக்கப்படும்
வழக்கு
நடவடிக்கை."

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— *முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :—

"(1) வழக்குத் தொடுக்கின்ற நிறுவனமானது, பிராதைச் சமர்ப்பித்ததன்மேல், கோரப்பட்ட பணத்தொகையானது, எதிராளியிடமிருந்து நிறுவனத்திற்கு சட்டப்படி வருமதியாயிருக்கின்றதென்ற பயன்படச் சத்தியக் கடதாசியொன்றையும், நனைசத் தீர்வைக்கும் அதனைச் சேர்ப்பிப்பதற்கும் தேவைப்படும் முத்திரைகளையும் பிராதுடன் கோப்பிடுதல் வேண்டும் ; அத்துடன் எந்தப் பிராதின்மீது, சத்தியக் கடதாசியின் மீது,

சாதனத்தின்மீது, உடன்படிக்கையின்மீது, அல்லது ஆவணத்தின்மீது நிறுவனத்தினால் வழக்குத் தொடரப்படுகின்றதோ அல்லது நிறுவனம் தங்கியிருக்கின்றதோ அதன் பிரதிகளை, வழக்கிலுள்ள எதிராளிகளின் எண்ணிக்கைக்குச் சமமான அளவில் அத்தகைய எண்ணிக்கையில் நீதிமன்றத்தில் மேலதிகமாகக் கோப்பிடுதலும் வேண்டும்.";

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "பிராதில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பிராதில் கோரப்பட்டுள்ள பணத்தொகையை" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(3) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் "ஒரு நாளாக இருத்தல் வேண்டும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஒரு நாளாக இருத்தல் வேண்டும் என்பதுடன் அதன்பின்னர் அத்தகைய நைசைத் திர்வைக்கு எதிராகத் தோன்றுவதற்கும் காரணம் காட்டுவதற்கும் என நீதிமன்றத்தினால் எதிராளிக்கு மேலதிக கால அவகாசம் எதுவும் வழங்கப்படலாகாது" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(4) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :—

"(4) ஓராம் உட்பிரிவின்கீழ் நிறுவனத்தினால் கோப்பிடப்பட வேண்டிய சத்தியக்கடதாசியானது, வழக்குகளுக்கான காரணத்தின் நிகழ்வுகள்பற்றிச் சொந்த அறிவுள்ளவரான நிறுவனத்தின் முதன்மை அலுவலர் ஒருவரினால் கோப்பிடப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஆள் அவரது சத்தியக்கடதாசியில், அதிலுள்ள விடயங்கள்பற்றித் தமக்குள்ள சொந்த அறிவின் பிரகாரம் தாம் வாக்குமூலம் கொடுப்பதாகச் சத்தியம் செய்தல் வேண்டும் அல்லது உறுதிப்படுத்தல் வேண்டும் என்பதுடன், நீதிபதியின் தற்துணிபின்பேரில், அதன் விடயப்பொருள்பற்றி விசாரணை செய்யப்படுவதற்கு ஆளாதலும் வேண்டும்.";

(5) அப்பிரின் (5) ஆம் உட்பிரிவை நீக்கிவிடுவதன்மூலமும்; அத்துடன்

(6) அப்பிரிவின் ஓரக்குறிப்புக்குப் பதிலாகப் பின்வரும் ஓரக்குறிப்பை இடுவதன்மூலமும்:—

"வழக்குத்
தொடரப்பட
வேண்டிய
சாதனத்தின்,
உடன்படிக்கையின்
அல்லது

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:—

முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

"நைசை தீர்வை சாதாரணமாகப் பதிவஞ்சல்மூலம் சேர்ப்பிக்கப்படுதல்.

5. (1) நைசை தீர்வையானது, 4ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, எதிராளியினால் மன்றுகைகள் தம்மீது சேர்ப்பிக்கப்படக்கூடிய முகவரியென நீதிமன்றத்துக்குத் தரப்பட்டதான முகவரிக்குப் பதிவஞ்சல் மூலமாக எதிராளியிடம் சாதாரணமாகச் சேர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(2) எதிராளியானவர் அரசாங்க அலுவலர் ஒருவராக இருக்குமிடத்து, நீதிமன்றம் அதன் தற்றுணிபின் பதிவஞ்சல்மூலமாக எதிராளிக்கு நைசை தீர்வையை அனுப்புவதுடன் மேலதிகமாக, நைசை தீர்வையை இணைப்பிரதிகளில் எதிராளி வேலைக்கமர்த்தப்பட்டுள்ள திணைக்களத்தின் தலைவருக்கும் பதிவஞ்சல் மூலம் அனுப்பிவைக்கலாம்; நைசை தீர்வையின் பிரதியொன்றை எதிராளியிடம் நேரில் சேர்ப்பிக்கச் செய்தலும், நைசை தீர்வையின் மறுபிரதியை, நைசை தீர்வையைப் பெற்றுக்கொண்டமைபற்றிய எதிராளியின் ஒப்புகைக் குறிப்புடன், அல்லது திணைக்களத் தலைவர் தாமே நேரில் சேர்ப்பிக்கவில்லையெனில் நைசை தீர்வையைச் சேர்ப்பிக்கின்ற ஆளினுல் அந்த மறுபிரதியின்மீது புறக்குறிப்பும் ஒப்பமும் இடப்பட்டு திணைக்களத் தலைவரின் மேலொப்பமும் கொண்ட கூற்றுடன் நீதிமன்றத்துக்கு உடனடியாகத் திருப்பியனுப்பி வைத்தலும் திணைக்களத் தலைவரின் கடமையாதல் வேண்டும்

(3) எதிராளியானவர், அரசாங்க அலுவலராக அல்லாது, இன்னோர் ஆளிடம் வேலைக்கமர்ந்துள்ளவராக இருக்குமிடத்து, நீதிமன்றம் அதன் தற்றுணிபில் பதிவஞ்சல்மூலமாக எதிராளிக்கு நைசை தீர்வையை அனுப்புவதுடன் மேலதிகமாக, எதிராளி வழமையாக தொழில்செய்யும் இடத்திலுள்ள அவரது தொழில் தருநருக்கும், அல்லது தொழில்தருநர் ஒரு கம்பெனியாக அல்லது கூட்டுத்தாபனமாக இருக்குமிடத்து அக்கம்பெனியின் அல்லது கூட்டுத்தாபனத்தின் செயலாளருக்கும், முகாமையாளருக்கும் அல்லது வேறு ஒத்த அலுவலருக்கும் நைசை தீர்வையை இணைப்பிரதிகளில் அனுப்பிவைக்கலாம்; விடயத்துக்கேற்றவாறு அத்தகைய தொழில்தருநர் அல்லது அலுவலர், நைசை தீர்வையின் பிரதியொன்றை எதிராளியிடம் நேரில் சேர்ப்பிக்கச்செய்தலும் நைசைத் தீர்வையின் மறு-

பிரதியின்மீது புறக்குறிப்பும் ஒப்பமும் இடப்பட்டு எதிராளியின் தொழில்தருநரினது மேலொப்பமும் கொண்ட கூற்றுடன் நீதிமன்றத்துக்கு உடனடியாகத் திருப்பியனுப்பி வைத்தலும் கடமையாதல் வேண்டும்.

(4) இப்பிரிவில் "திணைக்களத் தலைவர்" என்பது—

(அ) இலங்கைத் தரைப்படையின், கடற்படையின், வான்படையின் ஏதேனும் பிரிவின் உறுப்பினர் தொடர்பாக பயன்படுத்தப்படும்போது, அப்பிரிவின் ஏவும் அலுவலர் எனப் பொருள்படும்;

(ஆ) மாகாண சபையொன்றில் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள ஆளொருவர் தொடர்பாகப் பயன்படுத்தப்படும்போது, அம்மாகாண சபையின் செயலாளர் எனப் பொருள்படும்;

(இ) மாகாண பகிரங்க சேவையிலுள்ள ஆளொருவர் தொடர்பாகப் பயன்படுத்தப்படும்போது, அத்தகைய ஆள் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள திணைக்களத்தின் தலைவர் எனப் பொருள்படும்;

(ஈ) உள்ளூரதிகார சபையொன்றில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள ஆளொருவர் தொடர்பில் பயன்படுத்தப்படுமிடத்து, அவ் உள்ளூரதிகாரசபை மாநகரசபையொன்றாக இருப்பின் சபையின் மாநகர ஆணையாளர் என்று பொருள்படும்; உள்ளூரதிகார சபை நகரசபையொன்றாக அல்லது பிரதேச சபையொன்றாக இருப்பின் அந்த நகரசபையின் அல்லது பிரதேசசபையின் தலைவர் என்று பொருள்படும்;

(உ) வேறு எவரேனும் பகிரங்க அலுவலர் தொடர்பில் பயன்படுத்தப்படுமிடத்து, அத்தகைய ஆள் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள அரசாங்கத் திணைக்களத்தின் தலைவர் என்று பொருள்படும்.".

முதனைமைச் சட்டவாக்கத்தில் 5அ, 5ஆ, 5இ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

5. ஐந்தாம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன் அவை முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவுகள் 5அ, 5ஆ, 5இ எனப் பயனுறுதலும் வேண்டும் :—

நைகைத் தீர்வை சேர்ப்பிக்கப்பட்டதற்கான எண்பிப்பு.

5அ. (1) ஐந்தாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் எவரேனும் எதிராளிக்கு பதிவுத்தபால் மூலம் நைகைத் தீர்வை சேர்ப்பிக்கப்படுமிடத்து, தீர்வை அனுப்பப்படும் பதிவுசெய்யப்பட்ட கடிதம் ஒப்படைக்கப்பட்டமைபற்றிய அறிவிப்பானது, அத்தகைய நைகைத் தீர்வை எதிராளிக்குச் சேர்ப்பிக்கப்பட்டதற்குப் போதுமான எண்பிப்பாதல் வேண்டும்.

(2) ஐந்தாம் பிரிவின் (2) ஆம் அல்லது (3) ஆம் உட்பிரிவின்கீழ் நைசைத் தீர்வையொன்று எதிராளியொருவருக்குச் சேர்ப்பிக்கப்படுமிடத்து, நைசைத் தீர்வை கிடைக்கப்பெற்றமைபற்றிய ஒப்பேற்றலொன்று அல்லது நைசைத் தீர்வையின் இணைப்பிரதியில் புறக்குறிப்பு செய்யப்பட்டதான சேர்ப்பித்தல் பற்றிய கூற்றொன்று எதிராளிக்கு அத்தகைய நைசைத் தீர்வை சேர்ப்பிக்கப்பட்டதற்குப் போதிய எண்பிப்பாதல் வேண்டும்.

(3) எதிராளிக்கு நைசைத் தீர்வை பதிவுத்தபாலில் அனுப்பப்பட்டுள்ளது எனவும் அதன் தொடர்பில், ஒப்படைக்கப்பட்டமைபற்றிய அறிவித்தல் பெறப்படவில்லையெனவும் நீதிமன்றம் திருப்தியுறுமிடத்து, நைசைத் தீர்வையை எதிராளி சாதாரணமாக வதியும் வீட்டின் துலாம்பரமான ஒரு பகுதியில் அல்லது கம்பனியின் அல்லது கூட்டுத்தாபனத்தின் விடயத்தில் அத்தகைய கம்பனியின் அல்லது கூட்டுத்தாபனத்தின் வழமையான தொழிலிடத்தில் அல்லது அலுவலகத்தில் ஒட்டிவைப்பதற்கு நீதிமன்றமானது பிசுக்காலுக்கு அல்லது அதன்பொருட்டு நீதிமன்றத்தால் அதிகாரமளிக்கப்பட்ட வேறு எவரேனும் அலுவலருக்கு அதிகாரமளித்தல் வேண்டும். அத்தகைய விடயத்தில் நைசைத் தீர்வை எதிராளிக்கு முறையாக சேர்ப்பிக்கப்பட்டதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

(4) ஐந்தாம் பிரிவின் (2) ஆம் அல்லது (3) ஆம் உட்பிரிவின்கீழ் நைசைத் தீர்வை எதிராளிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்பட்டுள்ளது எனவும் எதிராளியால் பெற்றுக்கொள்ளப்பட்டமைபற்றிய ஒப்பேற்றல் அல்லது எதிராளிக்குச் சேர்ப்பித்தல்பற்றிய கூற்றொன்று அதன் தொடர்பில் பெற்றுக்கொள்ளப்படவில்லை எனவும் நீதிமன்றம் திருப்தியுறுமிடத்து, நைசைத் தீர்வையை எதிராளி சாதாரணமாக வதியும் வீட்டின் துலாம்பரமான ஒரு பகுதியில் ஒட்டிவைப்பதற்கு நீதிமன்றம் பிசுக்காலுக்கு அல்லது அதன் பொருட்டு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட வேறு அலுவலருக்கு அதிகாரமளித்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய விடயத்தில் நைசைத் தீர்வை எதிராளிக்கு முறையாகச் சேர்ப்பிக்கப்பட்டதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

மன்றுபேணும் அலுவலர் ஒருவரூடாக நைசைத் தீர்வை சேர்ப்பிக்கப்படலாம்.

5ஆ. (1) நீதிமன்றமானது, அதன்பொருட்டு விண்ணப்பம் செய்யப்படுவதன்மீது, நைசைத்தீர்வை பதியப்பட்டபின்னர் உடனடியாக அதன் தற்றுணிபின்படி நைசைத் தீர்வையைப் பதிவுத் தபாலில் சேர்ப்பிப்பதற்குப் பதிலாக மன்றுபேணும் அலுவலர் ஒருவர் ஊடாக எதிராளிக்கு நேரடியாக அதனை கொடுப்பதன்மூலம் அல்

லது ஒப்படைப்பதன்மூலம் சேர்ப்பிக்கப்பட வேண்டுமெனக் கட்டளையிடலாம்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட சேர்ப்பித்தலை முறையான நிதானத்துடன் பயனுறுத்த முடியாவிடில் மன்றுணை அலுவலர் நைசைத் தீர்வையை எதிராளி சாதாரணமாக வதியும் வீட்டின் அல்லது ஒரு கம்பனியின் அல்லது கூட்டுத்தாபனத்தின் விடயத்தில் அத்தகைய கம்பனியின் அல்லது கூட்டுத்தாபனத்தின் வழமையான தொழிலிடத்தின் அல்லது அலுவலகத்தின் துலாம்பரமான ஒரு பகுதியில் ஒட்டிவைத்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய ஒவ்வொரு விடயத்திலும் நைசைத் தீர்வை எதிராளிக்கு முறையாகச் சேர்ப்பிக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

(3) எதிராளிக்கு அல்லது அவரது சார்பில் வேறு எவரேனும் ஆளுக்கு நைசைத் தீர்வை சேர்ப்பிக்கப்படுவதன்மீது நைசைத்தீர்வை சேர்ப்பிக்கப்பட்டதற்கான ஒப்பேற்றலொன்றுக்கு மூலப்பிரதியின் அத்தகைய எதிராளியின் அல்லது ஆட்களின் கையொப்பம் அல்லது பெருவிரல் அடையாளம் அல்லது இவையிரண்டும் இடப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்துவது மன்றுணை அலுவலரின் கடமையாதல் வேண்டும்.

(4) மன்றுணை அலுவலர் நைசைத் தீர்வை சேர்ப்பிக்கப்பட்ட முறை, இடம், அது சேர்ப்பிக்கப்பட்ட ஆளின் ஆளடையாளம், தேதி, நேரம் என்பன தொடர்பான வேறு விவரங்கள் விரிவாகத் தரப்பட்ட கட்டளையை நீதிமன்றத்திற்குக் திருப்பியனுப்புதல் வேண்டும், அத்துடன் அது எந்த ஆளுக்குச் சேர்ப்பிக்கப்பட்டதோ அந்த ஆளுக்கு ஆள் அத்தகைய சேர்ப்பித்தலுக்கான ஒப்பேற்றலாக அவரது கையொப்பத்தை அல்லது பெருவிரல் அடையாளத்தை அல்லது இரண்டையும் வைத்தாரா அல்லது கையொப்பத்தை அல்லது பெருவிரல் அடையாளத்தை அல்லது இரண்டையும் மறுத்தாரா என்பதனையும் மூலப்பிரதியில் குறிப்பிட வேண்டும்.

(5) விடயத்திற்கேற்ப மூலப்பிரதியில் கையொப்பத்தை அல்லது பெருவிரல் அடையாளத்தை அல்லது இரண்டையும் வைக்க மறுத்தலானது அழைப்புக் கட்டளை சேர்ப்பிக்கப்பட்டமையைச் செல்லுபடியற்றதாக்குதல் ஆகாது.

(6) இப்பிரிவின் நோக்கத்துக்காக —

"மன்றுணை அலுவலர்" என்பது, எந்த நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தின் உள்ளூர் எல்லைகளுக்குள் நைசைத் தீர்வை சேர்ப்பிக்கப்படுகின்றதோ அந்த நீதிமன்றத்தின் அதே நியாயாதிக்கம் கொண்ட நீதிமன்றமொன்றின் நீதிமன்ற பிசுக்கால் அலுவலர் அல்லது பிசுக்கால் அல்லது நைசைத் தீர்வையைச் சேர்ப்பிப்பதற்கு விதிவிலக்கிற்குட்பட்ட சூழ்நிலைகளில் நீதிமன்றத்தால் விசேடமாக அதிகாரமளிக்கப்பட்ட ஓர் அலுவலர் அல்லது நீதிமன்றமொன்றின் எவரேனும் மன்றுணை அலுவலர் அல்லது கிராம அலுவலர் அல்லது தனியார் மன்றுணை சேர்ப்பிப்பவர் ஒருவர் என்று பொருள்படும் ;

"தனியார் மன்றுணை சேர்ப்பிப்பவர்" என்பது, ஒரு சட்டத்தரணியால் அல்லது ஏதேனும் நிறுவனத்தினால் தொழிலுக்கமர்த்தப்பட்டவரும் எழுத்திலான ஏதேனும் சட்டத்தின்கீழ் தனியார் மன்றுணை சேர்ப்பிப்பவராக பிசுக்காலினால் பதிவு செய்யப்பட்டவருமான ஆளொருவர் என்று பொருள்படும்.

*மன்றுணை சேர்ப்பிப்பவர் ஊடாக சேர்ப்பித்தல் செய்யப்படுமிடத்து சேர்ப்பிக்கும் முறை.*

5இ. நைசைத் தீர்வையொன்று மன்றுணை அலுவலர் ஒருவர் ஊடாக நேரடியாக சேர்ப்பிக்கப்பட வேண்டுமெனக் கட்டளையிடப்படுமிடத்து, அத்தகைய நைசைத் தீர்வை இலங்கையின் எந்தப் பாகத்திலும் சேர்ப்பிக்கப்படலாம். ஆயினும், நைசைத் தீர்வையொன்றை வழங்கும் நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தின் உள்ளூர் எல்லைகளுக்கு வெளியே அது சேர்ப்பிக்கப்படவேண்டுமெனத் தேவைப்படுமிடத்து, அத்தகைய நைசைத் தீர்வையானது அத்தகைய நீதிமன்றத்தால் எந்த நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தினுள் எதிராளி வதிவதாக நம்பப்படுகின்றதோ அந்த நீதிமன்றத்திற்கு அனுப்பப்படுதல் வேண்டும் என்பதுடன் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க நைசைத் தீர்வையை எதிராளிக்கு முறையாகச் சேர்ப்பிக்கச் செய்வித்தல் கடைசியாகச் சேர்ப்பிக்கக் குறிப்பிடப்பட்ட நீதிமன்றத்தின் கடமையாதலும் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது.

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும் :—

"(2) நீதிமன்றம், வழக்காளியின் உரிமைக் கோரிக்கை பற்றிக் குறிப்பாகக் கூறுகின்றதும், அத்துடன் உரிமைக் கோரிக்கைக்கான எதிராளி தரப்பு வாதம் என்ன, அத்துடன் அதற்கு ஆதாரமாக எந்நிகழ்வுகள் எடுத்தாளப்படுகின்றனவோ அந்நிகழ்வுகளைத் தெளிவாகவும் சுருக்கமாகவும் கூறுகின்றதுமான

சத்தியக் கடதாசியை ஆதாரமாகக் கொண்டதும் நீதிமன்றத்தில் தோன்றி காரணம் காட்டுவதற்கு அனுமதி பெறுவதற்கானதுமான விண்ணப்பம் ஒன்று எதிராளியினால் கோப்பிடப்பட்டதன் மேலும் அத்துடன் எதிராளிக்குத் தம்பக்க உரையை எடுத்தியம்பச் சந்தர்ப்பமொன்று அளிக்கப்பட்ட பின்னரும்—

(அ) நைசைத் தீர்வையினால் குறிக்கப்பட்டுள்ள பணத் தொகையை நீதிமன்றத்துக்கு எதிராளி செலுத்தியதன் மேல் ; அல்லது

(ஆ) நைசைத் தீர்வையானது, முற்றான கட்டளையாக்கப்படும் பட்சத்தில், நைசைத் தீர்வையில் குறிக்கப்பட்டுள்ள பணத்தொகையைக் கொடுத்துத் தீர்ப்பதற்கு நியாயமானதெனவும் போதுமானதெனவும் நீதிமன்றத்துக்குத் தோன்றக்கூடியவாறான அத்தகைய பிணைப் பொறுப்பை எதிராளி செலுத்தியதன்மேல் ; அல்லது

(இ) கோப்பிடப்பட்ட சத்தியக் கடதாசியிலுள்ள விடயங்கள் முதற்றோற்ற அளவில் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய எதிர்காப்பு வாதம் ஒன்றை வெளிக்காட்டுகின்றதென நீதிமன்றம் திருப்திப்பட்டதன் மேலும் பிணைப்பொறுப்பு, வழக்கெழு விளுக்களை வருத்தல், பதிவுசெய்தல் அல்லது வேறுவகையாக நீதிமன்றம் பொருத்தமானதென எண்ணும் அத்தகைய நியதிகளின் மீதும்

நீதிமன்றத்தில் தோன்றி நைசைத் தீர்வைக்கு எதிராகக் காரணம் காட்டுவதற்கு எதிராளிக்கு அனுமதி வழங்குதல் வேண்டும்.".

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும் :—

"(3) எதிராளியானவர், நீதிமன்றத்தில் தோன்றிக் காரணம் காட்டுவதற்குத் தவறுகின்றவிடத்து அல்லது தோன்றிய பின்னர், காரணம் காட்டுவதற்கான அவரது விண்ணப்பம் மறுக்கப்படுகின்றவிடத்து, நீதிமன்றமானது நைசைத் தீர்வையை முற்றான தீர்வையாக ஆக்குதல் வேண்டும். இந்நோக்கத்துக்காக, நீதிபதி, "நைசைத் தீர்வை முற்றான தீர்வையாக்கப்பட்டது" (அல்லது அதேபோன்ற பயன்கொண்ட சொற்களை) நைசைத் தீர்வைமீது புறக்குறிப்பிடுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய புறக்குறிப்புமீது தேதியிட்டு ஒப்பமிடுதலும் வேண்டும் :

ஆயின், நைசைத் தீர்வையொன்று தனிவேறான பாகங்களைக் கொண்டிருந்தால், அது பாகமாக நிறைவேற்றப்படலாம் அத்துடன் பாகமாக முற்றானதாக ஆக்கப்படலாம் அத்துடன், இதில் ஆக்கப்பட்டுள்ள எதுவும், நைசைத் தீர்வையை அடிப்படையாக வைத்து, வழக்காளியினதும் எதிராளியினதும் சம்மதத்தைக் கொண்டு கட்டளை எதுவும் ஆக்கப்படுவதைத் தடை செய்தலாகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் புதிய 6அ என்னும் பிரிவை உட்புகுத்துதல்.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், அது, அச்சட்டவாக்கத்தின் 6அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்.

"நைசைத் தீர்வையை முற்றான தீர்வையாக்கும் கட்டளைக்கெதிராக மேன்முறையீடு செய்ய முடியாது, ஆனால் அக்கட்டளை தள்ளிவைக்கப்படலாம்.

6அ. (1) ஆறும் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் முற்றான தீர்வையாக்கப்பட்ட நைசைத் தீர்வைக்கெதிராக, எதிராளிகள் சமுகமாகவில்லையென்ற ஏதுவின் மீது எதிராளியொருவரினால் மேன்முறையீடெதுவும் செய்யப்படலாகாது, ஆனால், நைசைத் தீர்வை விண்ணப்பகாரரிடம் சேர்ப்பிக்கப்பட்ட பின்னர் விபத்து அல்லது ஓர் சம்பவம் காரணமாக அவர் சமுகமாவதிலிருந்து தடைசெய்யப்பட்டார் அல்லது அத்தகைய நைசைத் தீர்வை அவரிடம் சேர்ப்பிக்கப்படவில்லையென்ற ஏதுவின்மீது அத்தீர்வையைத் தள்ளிவைப்பதற்கு எவ்வெதிராளிக்கு எதிராக அத்தகைய முற்றான கட்டளை பதியப்பட்டதோ, அவ்வெதிராளியினால் சுருக்க நடவடிக்கைமுறை என்ற வகையில் செய்யப்படும் விண்ணப்பமொன்றை முற்றான தீர்வை பதியப்பட்டபின்னர் நியாயமான காலமொன்றுக்குள் ஏற்றுக்கொள்வது நீதிமன்றத்துக்குத் தகுதிவாய்ந்ததாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் செய்யப்படும் விண்ணப்பமொன்று எவ்வேதுவின்மீது செய்யப்படுகின்றதோ, அவ்வேதுவானது வழக்காளிக்கு எதிராக நீதிமன்றத்தின் திருப்திக்கேற்ப முறையாகத் தாபிக்கப்படுகின்றவிடத்து, நீதிமன்றம், முற்றான தீர்வையை, விண்ணப்பகாரர்மீது சுமத்துவதற்கு நீதியானதெனவும் சரியானதெனவும் நீதிமன்றம் கருதக்கூடியவாறான அத்தகைய நியதி, நிபந்தனைகள்மீது தள்ளிவைக்கலாம். அத்துடன், நைசைத் தீர்வையானது, அவ்வாறு தள்ளிவைக்கப்பட்டதன்மேல், நீதிமன்றம், இச்சட்டத்தின் 7 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, விடயத்தை, விசாரித்துத் தீர்மானித்தல் வேண்டும்.

(3) சுருக்க நடவடிக்கைமுறை என்ற வகையில் இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் எதிராளி எவரினாலும் விண்ணப்பம் ஒன்று செய்யப்படுமிடத்து, சுருக்க நடவடிக்கைமுறை என்ற வகையிலான விண்ணப்பம் தொடர்பான (101 ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் ஏற்பாடுகள், அத்தகைய விண்ணப்பம் தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்.

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவு, "பிரிவுகள் 384, 385, 386, 387, 388, 390 அத்துடன் 391" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்குப் பதிலாக, "பிரிவுகள் 384, 385, 386, 387, 390 அத்துடன் 391" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவு, இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

"கோப்பிடப் பட்ட ஆவணங்களின் மூலப்பிரதிகள் பரிசீலனைக் காகக் கிடைக்கக் கூடியதாயிருக் கச் செய்யப்படுவதற்கு நீதிமன்மன்றம் கட்டளை ஆக்கலாம்.

8. இச்சட்டத்தின்கீழான எவ்வழக்கு நடவடிக்கைகளிலும், நீதிமன்றமானது, எச்சாதனத்தின், எவ்வுடன்படிக்கையின் அல்லது எவ்வேறு ஆவணத்தின் பிரதிகள் பிராதுடன் கோப்பிடப்பட்டனவோ அல்லது எச்சாதனத்தின்மீது, எவ்வுடன்படிக்கையின்மீது அல்லது எவ்வேறு ஆவணத்தின்மீது வழக்கு ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறதோ, அச்சாதனத்தின் அவ்வுடன்படிக்கையின் அல்லது அவ்வேறு ஆவணத்தின் மூலப்பிரதி, நீதிமன்றத்தில் வழக்குக்கு ஆதாரமாக வாதம் எடுத்துமொழியப்படும்போது, நீதிமன்றத்தினால் பரிசீலனை செய்யப்படுவதற்குக் கிடைக்கக்கூடியதாகச் செய்யப்படல் வேண்டுமென நீதிமன்றம் கட்டளையிடலாம் என்பதுடன் குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைக்கு முரணாக எது எப்படியிருப்பினும், அத்தகைய சாதனம் உடன்படிக்கை அல்லது ஆவணம், அதற்குப்பின்னர் வழக்காளியிடம் அத்தகைய பரிசீலனைக்குப் பின்னர், திருப்பியளிக்கப்படுதலும் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவு, இத்தால் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இப்படுகின்றது :—

"நஷ்டஈடு வழங்குதல்.

11. (1) இச்சட்டத்தின்கீழ் தொடரப்படும் வழக்கொன்றில் பதியப்படும் நைசைத் தீர்வையொன்றானது இயைபான நிகழ்வுகளை வேண்டுமென்றே மறைத்து அல்லது வெளிக்காட்டாமல் பெறப்பட்டதென நீதிமன்றத்துக்குத் தோன்றுகின்றவிடத்து, அல்லது நைசைத் தீர்வை நிறைவேற்றப்பட்டு வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டால், நீதிமன்றம், அதே வழக்கில், எத்திறத்தவருக்கெதிராக நைசைத் தீர்வை பதியப்பட்டதோ, அத்திறத்தவரால் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றின் மேல், நைசைத் தீர்வையைப் பெற்ற நிறுவனத்துக்கு எதிராக, அத்தகைய நைசைத் தீர்வை வழங்கியதால் அத்தகைய திறத்தவருக்கு ஏற்பட்ட செலவுக்காக அல்லது உறுக்காக, நியாயமான நஷ்டஈடு என அது கருதுகின்ற அத்தகைய பணத்தொகையை வழங்கலாம் என்பதுடன், இவ்வுட்பிரிவின்கீழான அளிப்பொன்றானது, நைசைத் தீர்வை பதியப்பட்டது தொடர்பிலான நஷ்டஈட்டுக்கான வழக்கெதையும் தடை செய்தலும் வேண்டும்.

(2) அத்தகைய வழக்கில் பதியப்பட்ட நைசைத் தீர்வையொன்று தொடர்பில் (1) ஆம் உட்பிரிவின்கீழ் நஷ்டஈட்டுக்காக விண்ணப்பமொன்று செய்யப்படுமிடத்து, இச்சட்டத்தின்கீழ் தொடுக்கப்பட்ட வழக்கு

எதுவும் தள்ளுபடி செய்யப்படுவது எப்படியிருப்பினும் அவ்வாறு தள்ளுபடி செய்யப்பட்ட வழக்கானது, அத்தகைய வழக்கானது தீர்மானிக்கப்படும்வரை தொடர்ந்திருப்பதாகக் கருதப்படல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

**11.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 12ஆம் பிரிவு, இத்தால் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

"வழக்கைச் சரிசெய்தல்.

**12.** நைசைத் தீர்வையின் விளைவாக எதிராளி நீதிமன்றத்தில் தோன்றி, நைசைத் தீர்வையை எதிர்த்து வாதிடாமல், ஆறுல் பொறுப்பை ஏற்றுக்கொண்டு தனிசைத் தவணைமுறையில் தீர்த்துவைப்பதற்கு வேண்டுகின்றவிடத்து, நீதிமன்றம், வழக்குக்கான இருதிறத்தவர்களினதும் அங்கீகாரத்துடன், பதிவேட்டில் இந்நிகழ்வைக் குறித்துக்கொள்ளுதல் வேண்டும் என்பதுடன் தீர்வையை முற்றுன தீர்வையாக ஆக்குதலும் வேண்டும். அத்தகைய இணக்கத் தீர்வானது, எதிராளியானவர் இணக்கத் தீர்வு நியமங்கள் எவற்றையும மீறி நடந்தாலொழிய, நிறைவேற்று நடவடிக்கையின் நிறுத்தி வைத்தல் ஒன்ருக நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். இச்சந்தர்ப்பத்தில், நிறுவனம், தீர்வையை நிறைவேற்றுவதற்கு உரித்துடையதாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

**12.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

"முற்றுன தீர்வை எழுத்தாணையொன்ருகக் கருதப்படல்.

**13.** (1) நீதிமன்றத்தின் கட்டளைகளுக்கு அமைய, இச்சட்டத்தின்கீழ் தொடுக்கப்படும் வழக்கொன்றில் பதியப்படும் நைசைத் தீர்வையொன்று முற்றுன தீர்வையாக ஆக்கப்படுகின்றவிடத்து, அது, (101ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் 225(3) ஆம் பிரிவின் நியதிகளின்படி பிசுக்காலுக்கு முறையாக வழங்கப்பட்ட நிறைவேற்று எழுத்தாணையொன்ருகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தில் முரணுக எது எப்படியிருப்பினும், அது நிறைவேற்றப்படுதலும் நிறுத்திவைக்கப்படுதலும் ஆகாது.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள நிறைவேற்று எழுத்தாணையானது, நைசைத் தீர்வை முற்றுன தீர்வையாக ஆக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்ருண்டு காலப்பகுதியொன்றுக்கு செல்லுபடியாதல் வேண்டும் என்பதுடன், நிறைவேற்று எழுத்தாணைகளை நிறைவேற்றுவதற்குக் குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையில் விதித்துரைக்கப்பட்ட விதத்தில் அதை நிறைவேற்றுவது பிசுக்காலின் கடமையாதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவைத் திருத்துதல்.

13. முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "அத்தகைய எதிர்ப்பை பிசுக்கால் அறிவித்தல் வேண்டும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "நிறைவேற்றுகையிலிருந்து பதினான்கு நாட்களுக்குள் அத்தகைய எதிர்ப்புப் பற்றி பிசுக்கால் அறிவித்தல் வேண்டும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தினாலும் (101 ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையினாலும், நீதிமன்றத்தை அவமதித்த தவறுக்காக விதித்துரைக்கப்பட்ட தண்டங்களுக்கு ஆளாதலும் வேண்டும்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "இரண்டாயிரத்து ஐநூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது இரண்டாண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கு ஆளாதலும் வேண்டும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவைத் திருத்துதல்.

14. முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும்:-

"(2) உட்பிரிவு (2அ) என்பதன் ஏற்பாடுகளுக்கு அமைவாக இச்சட்டத்தின்கீழ் தொடுக்கப்பட்ட வழக்கொன்றின் ஓர் எதிராளி அல்லது அக்கறையுள்ள அவரது பிரதிநிதி, அத்தகைய எதிராளிமீது அத்தகைய வழக்கில் பதியப்பட்டதான நைசைத் தீர்வை சேர்ப்பிக்கப்பட்டதன்பின் ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைப் பாராதீனப்படுத்துதலோ அல்லது எத்தன்மைத்தான எந்த விதத்திலும் அவற்றை வேறுவகையாகக் கையுதிர்த்தலோ ஆகாது.".

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவுகளை உட்புகுத்துவதன்மூலமும்—

"(2அ) (அ) நைசைத் தீர்வையில் குறிப்பிடப்பட்ட பணத்தொகையை எதிராளி நீதிமன்றத்திற்குச் செலுத்தியுள்ளவிடத்து; அல்லது

(ஆ) எந்த வழக்கில் முற்றான தீர்வை பதியப்பட்டதோ அந்த வழக்குத் தள்ளப்பட்டுள்ளது அல்லது நைசைத் தீர்வை விலக்கப்பட்டது என்றவிடத்து;

(இ) ஆனால் பாராதீனப்படுத்தப்பட்டதான அத்தகைய ஆதனம் தொடர்பாக மாத்திரமே முற்றான தீர்வை திருப்தியாகவுள்ளது அல்லது முற்றான தீர்வையின் திருப்திப்படுத்தலில் அது கைப்பற்றப்பட்டு ஏற்புடைத்தாக்கப்படவில்லை என்றவிடத்து; அத்துடன்

(ஈ) பாரதீனப்படுத்துகையானது, நீதிமன்றத்தின் அங்கீகாரத்துடனும், நீதிமன்றத்தினால் விதிக்கப்படக்கூடிய வாறான அத்தகைய நியதிகள், நிபந்தனைகளுக்கு அமைவாகவும் மேற்கொள்ளப்பட்டிருக்குமிடத்தும்;

ஓர் எதிராளி அல்லது அவரது பிரதிநிதி ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைப் பாரதீனப்படுத்துவது அல்லது வேறுவகையாக அவர்மீது நசைத் தீர்வை சேர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் அதனை எத்தன்மைத்தான எந்த விதத்திலும் கையுதிர்ப்பது எதிராளி ஒருவருக்கு (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுதலாகாது.

(2ஆ) மேற்போந்த ஏற்பாடுகளின் மீறுகையாக ஏதேனும் ஆதனம் பாரதீனப்படுத்தப்பட்டுள்ளவிடத்து அல்லது வேறு வகையாகக் கையுதிர்க்கப்பட்டுள்ளவிடத்து :—

(அ) அத்தகைய பாரதீனப்படுத்துகையானது வெற்றானதும் வறிதானதுமாதல் வேண்டும் என்பதுடன் சட்டத்தில் அது எவ்வலுவோ அல்லது பயனோ கொண்டதாதலாகாது; அத்துடன் அத்தகைய ஆதனமானது எவர் கையில் இருந்ததாயினுஞ்சரி கைப்பற்றப்படுவதற்கு உரியதாதலும் வேண்டும்:

ஆயின், பாரதீனப்படுத்தப்பட்ட ஆதனமானது, ஒன்றில் கொள்வனவுப் பணம் செலுத்தப்பட்டபோது அல்லது உரித்துமாற்றம் நிறைவேற்றப்பட்டபோது நசைத் தீர்வை பற்றிய அறிவித்தல் இல்லாமல் பிரதிபயனுக்காக நன்னோக்குடன் அத்தகைய ஆதனத்தைப் பெற்றுக் கொண்ட பாரதீனப்படுத்தப்பட்டவர் ஒருவரிடமிருக்குமிடத்து அல்லது மேற்சொல்லப்பட்ட அத்தகைய பாரதீனப்படுத்தப்பட்டவரிடமிருந்து பாராதீனம் பெற்றவர் ஒருவரிடம் இருக்குமிடத்து அத்தகைய பாரதீனப்படுத்தலானது வெற்றும் வறிதாதலும் ஆகாதென்பதுடன், அவ்வாதனம் கைப்பற்றப்படுவதற்கு உள்ளாதலும் ஆகாது; அத்துடன்

(ஆ) ஆதனத்தைப் பாரதீனப்படுத்திய ஆள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதிவான் ஒருவராலான சுருக்கமுறை விளக்கத்தின் பின் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐம்பதினாயிரம் ரூபாவுக்குக் குறையாத குற்றப்பணத்திற்கு அல்லது இரண்டு வருடங்களுக்கு குறையாத மறியற்றண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

(2இ) 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 303 ஆம் பிரிவின் ஏற்பாடு, (2ஆ) என்னும் உட்பிரிவின்கீழ் எந்தத் தவறாளி ஒருவர் மீது மறியற்றண்டனை விதிக்கப்பட்டதோ அந்தத் தவறாளி ஒருவர் தொடர்பில் ஏற்புடைத்தலாகாது"; அத்துடன்

(3) அப்பிரிவின் (ஆ) என்னும் உட்பிரிவில் "(2) ஆம் உட்பிரிவில் உள்ள எதுவும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "(2ஆ) என்னும் உட்பிரிவில் உள்ள எதுவும்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

**15.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு, அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:—

"மேன்முறையீடு செய்வதற்கான அனுமதி வழங்கப்படுமிடத்து, தொடக்க நீதிமன்றத்திலுள்ள வழக்கு நடவடிக்கைகள் நிறுத்தப்படுதலாகாது.

**16.** இச்சட்டத்தின்கீழ் தொடரப்பட்ட ஏதேனும் வழக்கின் நெறிமுறையில், ஆக்கப்பட்டவொரு கட்டளை தொடர்பில் மேன்முறையீடு செய்வதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளவிடத்து, வேறேதேனும் சட்டத்தில் முரணுகை எது எவ்வாறிருப்பினும், மேன்முறையீட்டு நீதிமன்றம் வேறு வகையில் பணித்தாலன்றி தொடக்க நீதிமன்றத்திலுள்ள வழக்கு நடவடிக்கைகள் நிறுத்தப்படுதலாகாது என்பதுடன் அவ்வாறு பணிக்குமிடத்து, அத்தகைய மேன்முறையீட்டாளர் 6 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின் கீழ் அவர் தோன்றிக் காரணம் காட்டுவதற்கான அனுமதி தொடக்க நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டிருக்குமிடத்து வழக்கின் எல்லாச் சூழ்நிலைகளிலும் நீதிமன்றம் தகுந்ததெனக் கருதுகின்றவாறு வழக்காளியின் முழு உரிமைக் கோரிக்கையையும் அல்லது அத்தகைய பாகத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்குப் பணமாக அல்லது வங்கியாளரிடமிருந்து உத்தரவாதமொன்றாகப் பணப்பொறுப்பு அளிக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் மேன்முறையீட்டாளரைக் கோருதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**16.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவானது இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

"மேன்முறையீட்டு நீதிமன்றத்திலுல் பதியப்பட்ட தீர்வையானது நிறைவேற்று எழுத்தாணையொன்றுதல் வேண்டுமென்பது.

17. (1) நைசைத் தீர்வையொன்றை முற்றுக்குகின்ற 6 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழ் செய்யப்பட்ட கட்டளையொன்றிற்கெதிராக முன்வைக்கப்பட்ட மேன்முறையீடொன்றை மேன்முறையீட்டு நீதிமன்றமானது அனுமதிக்கின்றவிடத்தும் அத்துடன் எழுத்தாணையானது இச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் நிறைவேற்றப்பட்டுள்ளவிடத்தும், மேன்முறையீட்டு நீதிமன்றமானது, தோதானதென அது கருதக்கூடியவாறான அத்தகைய பணத்தொகையைச் சேத ஈடாக அளிக்கின்றதானதும் மேன்முறையீட்டாளருக்குச் சார்பானதுமான தீர்வையைப் பதிதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் பதியப்பட்ட தீர்வையானது 101 ஆம் அத்தியாயமான குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக் கோவையின் 225 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்

நியதிகளின்படி பிசுக்காவுக்கு முறைபாக வழங்கப்பட்ட நிறைவேற்று எழுத்தாணையொன்றுதல் வேண்டும். ஆனல் அதன் நிறைவேற்றுகையானது—

(அ) மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்புக்கெதிராக உயர் நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்வதற்கான அனுமதி கோரும் விண்ணப்பம் எதுவும் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்குச் செய்யப்படாதவிடத்து அல்லது உயர் நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்வதற்கான விசேட அனுமதி கோரும் விண்ணப்பமெதுவும் உயர் நீதிமன்றத்திற்குச் செய்யப்படாதவிடத்து விடயத்திற்கேற்றுற்போல் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு அல்லது உயர் நீதிமன்றத்திற்கு அத்தகைய விண்ணப்பம் எக்காலப்பகுதிக்குள் செய்யப்படலாமோ அக்காலப்பகுதி முடிவடையும் வரை ;

(ஆ) மேன்முறையீட்டு நீதிமன்றம் உயர் நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்வதற்கு அனுமதி வழங்குகின்றவிடத்து அல்லது உயர் நீதிமன்றம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் முடிவுக்கெதிராக உயர் நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்வதற்கு விசேட அனுமதி வழங்குகின்றவிடத்து, உயர் நீதிமன்றத்தின் முடிவு வரை அது நிறுத்திவைக்கப்படுதல் வேண்டும்.

(3) மேன்முறையீட்டு நீதிமன்றத்தினல் முற்றுன தீர்வைக்கெதிராக உயர் நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்வதற்கான அனுமதி வழங்கப்பட்டவிடத்து, மேன்முறையீட்டாளர் விடயத்தின் எல்லாச் சூழ்நிலைகளிலும் நீதிமன்றம் தகுந்ததெனக் கருதும் அத்தகைய பணத்தொகையை அல்லது அதன் அத்தகைய பாகத்தை முழுமையாகத் திருப்திசெய்யும் அளவிற்கு காசாக அல்லது வங்கி ஒன்றிலிருந்து பெற்ற உத்தரவாதமாக பிணைப்பொறுப்பு கொடுக்குமாறு மேன்முறையீட்டாளர் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(4) உயர் நீதிமன்றமானது (2) ஆம் உட்பிரிவின் (அ) அல்லது (ஆ) என்னும் பந்தியின்கீழ் அதற்குச் செய்யப்பட்ட மேன்முறையீட்டை அனுமதிக்கின்றவிடத்து, முற்போந்த ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், உயர் நீதிமன்றத்தினல் ஆக்கப்பட்ட தீர்வை (101 ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் 225 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் நியதிகளின் உட்பிரிவுகளின்படி பிசுக்காவுக்கு முறையாக வழங்கப்பட்ட நிறைவேற்று எழுத்தாணையாகக் கருதப்படல் வேண்டுமென்பதுடன் எழுத்தாணைகளை

நிறைவேற்றுதல் தொடர்பாக குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையில் விதித்துரைக்கப்பட்ட முறையில் அதனை நிறைவேற்றுதல் பிசுக்காலின் கடமை யாதலும் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவை நீக்கஞ் செய்தல்.*

17. முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவானது இத்தால் நீக்கஞ் செய்யப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

18. முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவானது இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவானது இடப்படுகின்றது :—

"மேலதிகமாகவுள்ள முதல் தொகையாக போமதியாகவுள்ளதன் வட்டியை அறவிடுதல்.

21. இச்சட்டத்தில் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் உள்ளது எதற்கும் முரணானது எப்படியிருப்பினும், நிறுவனமொன்றுனது இச்சட்டத்தின் கீழ் தொடுக்கப்பட்ட வழக்கொன்றில் முதல் தொகையாக போமதியாகவுள்ள பணத்தொகையின் மேலதிகமாகவுள்ள ஏதேனும் பணத்தொகையை அத்தகைய வழக்கில் வட்டியாக அறவிடலாம்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 25 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

19. முதன்மைச் சட்டவாக்கத்தின் 25 ஆம் பிரிவானது அதன் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அவ்வுட்பிரிவின் (அ) அத்துடன் (ஆ) என்னும் பந்திகளுக்குப் பதிலாகப் பின்வரும் பந்திகளை இடுவதன்மூலம் :—

"(அ) நிதிகள் பற்றுக்குறைக்காக வங்கியொன்றினுல் ஏற்க மறுக்கப்பட்ட காசோலை ஒன்றை தெரிந்துகொண்டு வரைகின்ற, அல்லது

(ஆ) பணக்கொடுப்பனவானது அத்தகைய வங்கியாளருக்கு அவ்வாறு கொடுப்பனவு செய்வதற்கு கடப்பாடு இல்லாதிருக்கும்போது அப்பணத்தொகையைக் கொடுக்குமாறு வங்கியாளர் ஒருவருக்கு கட்டளை ஒன்றை விடுக்கின்ற அல்லது கொடுக்கப்பட்ட கட்டளையானது தீய உளக் கருத்துடன் பின்னர் ஏற்க மறுக்கப்படுமாயின் அல்லது,";அத்துடன்

(2) அவ்வுட்பிரிவின் (ஈ) எனும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :—

"(ஈ) உள்நாட்டு உண்டியல் ஒன்றையும் பெற்றுக்கொண்டு நேர்மையீனமாக கொடுப்பனவை மறுக்கின்ற;".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 25அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

20. முதன்மைச் சட்டவாக்கத்தின் 25 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 25அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"ஆட்கள் குழுக்களி

25அ. இச்சட்டத்தின் கீழான தவறொன்று ஆட்கள் குழுவொன்றினால் புரியப்படுகின்றவிடத்து, அப்போது—

(அ) அவ்வாட்கள் குழுவானது கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக இருந்தால், அக்கூட்டிணைக்கப் பட்ட குழுவின் ஒவ்வொரு பணிப்பாளரும், முகாமையாளரும் அல்லது செயலாளரும் ;

(ஆ) அவ்வாட்கள் குழுவானது ஒரு குழுமமாக இருந்தால், அக்குழுமத்தின் ஒவ்வொரு பங்காளியும் ; அத்துடன்

(இ) அவ்வாட்கள் குழுவானது கூட்டிணைக்கப்படாத குழுவொன்றாக இருந்தால், அத்தகைய குழுவில் உறுப்பினராக இருக்கின்ற ஒவ்வொரு தனியாளும்.

அத்தவறுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் ;

ஆயின், அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிப்பாளர் அல்லது முகாமையாளர் அல்லது செயலாளர் ஒருவர் அல்லது அத்தகைய குழுமத்தின் பங்காளியொருவர், அத்தகைய தவறானது அவருக்குத் தெரியாமல் புரியப்பட்டதென அல்லது அத்தகைய தவறு புரியப்படுவதைத் தடுப்பதற்கு எல்லா விழிப்புக் கவனத்தையும் அவர், பிரயோகித்தாரென எண்பித்தால், அவர், அத்தகைய தவறுக்குக் குற்றவாளியெனக் கருதப்படுதலாகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவைத் திருத்துதல்.

21. முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) "தனிக" எனும் சொல்லின் வரைவிலக்கணத்திற்கு நேர்முன்னர் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலம்:—

"ஒப்படைத்ததற்கான அறிவித்தல்" என்பது உள்நாட்டு அஞ்சல் (பதிவுசெய்யப்பட்ட மற்றும் காப்புறுதி செய்யப்பட்ட பொருட்கள்) விதிகளின் 9 (ஆ) எனும் விதியின்கீழ் வழங்கப்பட்ட ஒப்படைத்ததற்கான அறிவித்தல் என்று பொருளாகும்;"

(2) "தனிசு" என்னும் சொல்லின் வரைவிலக்கணத்திற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும்:—

"தனிசு" என்பது வழக்குத் தொடுக்கப்படும் நேரத்தில் ஆய்ந்தறியப்பட்டதும் அல்லது ஆய்ந்தறியப்படக்கூடியதும், அத்துடன் பொறுப்பிக்கப்பட்டதாயினுஞ்சரி அல்லாவிடி

னுஞ்சரி அல்லது அது எவரேனும் ஆளினுல் அல்லது ஆட்களினுல் கூட்டாகவோ தனித்தனியாகவோ அல்லது முதன்மைக் கடன்பெறுநராகவோ அல்லது உத்தரவாதம் செய்பவராகவோ அல்லது வேறு ஏதேனும் தன்மையில் கொடுக்குமதியானதாக உள்ளதும் அத்துடன் கடன் கொடுக்கும் நிறுவனத்தின் வங்கித்தொழில், கடன் வழங்கல், நிதிவழங்கல் அல்லது வேறு தொடர்புடைய தொழிற் செயற்பாட்டின் நெறிமுறையின்போதான கொடுக்கல் வாங்கல் ஒன்றிலிருந்து எழுந்ததாக அந்நிறுவனத்தினுல் சார்ந்துரைக்கப்பட்டதுமான ஒரு பணத்தொகை என்று பொருள்படும். ஆனுல் எழுத்திலல்லாத ஒரு வாக்குறுதியின்கீழ் அல்லது உடன்படிக்கையின்கீழ் கொடுக்குமதியான பணத்தொகையை உள்ளடக்கமாட்டாது.'';

(3) ''கடன் வழங்கும் நிறுவனம்' என்னும் சொல்லமைப்பின், வரைவிலக்கணத்தின் (ஊ) என்னும் பந்திக்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன் மூலமும்:—

''(ஊ) நிதித்தொழிலைக் கொண்டுநடாத்துவதற்கென 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க, நிதிக்கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட ஒரு கம்பெனி,

அத்துடன் 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட ஓர் கலைப்போனை அல்லது மேலே குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் வங்கியின், கூட்டுத்தாபனத்தின் அல்லது கம்பனியின் தொழிலைக் கொண்டுநடாத்துவதற்கு அல்லது ஒடுக்குவதற்கு முறையாக நியமிக்கப்பட்ட எவரேனும் அதிகாரியை உள்ளடக்கும்.''.

*முதன்மைச் சட்டவாக்கத்திற்கான முதலாவது அட்டவணையை மாற்றீடு செய்தல்.*

22. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான முதலாவது அட்டவணை இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் அட்டவணை இடப்படுகிறது :—

''முதலாவது அட்டவணை (பிரிவு 4 (27))

நைசைத் தீர்வைப் படிவம்

(தலைப்பு)

இவ்வழக்கு 19........... ஆம் ஆண்டு ........... மாதம் ........... ஆம் தேதி (நீதிபதியின் பெயரும் பதவியும்) .................... முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு பிராதையும் ஆவணங்களையும் வாசிதலுக் கோப்பிடப்பட்ட சத்தியக் கடதாசியின் உள்ளடக்கத்தையிட்டு திருப்திப்பட்டபின்னர்,

எதிராளி பணத்தொகை : ........... ரூபாவையும் அத்துடன் ........... ஆம் தேதியிலிருந்து ........... ஆம் தேதிவரை ........... நூற்றுவீதப்படி வட்டியையும் அதன் பின்னர் இத்தேதியிலிருந்து கொடுப்பனவு முழுவதும் வழக்குச் செலவுடன் சேர்த்துச் செலுத்தப்படும்வரை, அதே வீதப்படி வட்டியையும் வழக்காளிக்குச் செலுத்தவேண்டும் எனக் கட்டளையிடப்பட்டு தீர்வையிடப்படுகிறது.

ஆதலால் வழக்காளி நீதிமன்றத்தின் இந்தத் தீர்வையின் மூலம் சொல்லப்பட்ட .................... என்பவருக்கு எதிராக அறவிட்டுள்ள பணத்தொகை .............. ரூபாவை விதிப்பதற்கும் மேற்கூறப்பட்ட .............. என்பவரின் வீடுகளையும், காணிகளையும், பொருட்களையும், தனிசுகளையும், வரவுகளையும் கைப்பற்றுவதன் மூலமும் அவசியமானல் அவற்றை விற்பனை செய்வதன் மூலமும், இவற்றினின்று பெறுவதற்கும் அத்துடன் இந்த நைசைத் தீர்வையானது முற்றுக்கப்பட்ட முப்பது நாட்களினுள் அல்லது இந்நீதிமன்றம் அனுமதிக்க வேண்டியவாறான அத்தகைய நீடிக்கப்பட்ட காலத்திற்குள் அப்பணத்தை இந்நீதிமன்றத்தின் முன்னிலையில் வைத்திருக்குமாறு அத்துடன் மாகாணத்தின் பிசுக்கால் ஆதனத்தை முறையே என்ன பணத்தொகைக்கு அல்லது பணத்தொகைகளுக்கு எந்த ஆளுக்கு அல்லது எந்த ஆட்களுக்கு விற்பனை செய்துள்ளாரென இத் நீதிமன்றத்திற்கு அறிவிக்குமாறும் .......... .......... மாகாணத்தின் பிசுக்காலுக்கு ஆணையிடுவதற்காகும். அத்துடன் இந்த நைசைத் தீர்வையானது அது முற்றுக் கப்பட்டவிடத்து அத்தகைய நோக்கத்துக்கான பணிப்பாணையொன்றாக அமைதலும் வேண்டும்.

இவை 19............ ஆம் ஆண்டு ............ மாதம் ............ ஆம் திகதி (நேரம்) .............. மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன் சமுகமளித்து நீதிமன்றத்தின் அனுமதியைப் பெற்று இந்த நைசைத் தீர்வை ஏன் முற்றுக்கப்படுதலாகாது என்பதற்கான காரணம் ஏதுமிருப்பின் அக்காரணத்தைக் காண்பிக்குமாறு எதிராளியான மேலே சொல்லப்பட்ட .................... ஆகிய உங்களுக்கு மேலும் கட்டளையிடப்படுகின்றது என்பதுடன் இவை அவ்வாறே உங்களுக்கு ஆணையிடுவதற்குமாகும். (ஒப்பம்) ........................ (நீதிவானின் பெயரும், பதவியும்) 19...... ஆம் ஆண்டு ............ மாதம் ............ ஆம் தேதி.".

23. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 ; (வெளிநாடு) ரூபா 1,859 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், 255, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 7 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.